ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ருதி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ கற்பார் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கற்பார் ॥

எம்பிரான்க்கு ஆளாகாத உலகத்தாரை நோக்கி இரங்குதல்

‡கற்பார் இராம பிரானை அல்லால்⋆ மற்றும் கற்பரோ⋆
புற்பா முதலாப்⋆ புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும்⋆ சராசரம் முற்றவும்⋆
நற்பாலுக்குய்த்தனன்⋆ நான்முகனார் பெற்ற நாட்டுளே (1)

நாட்டில் பிறந்தவர்⋆ நாரணற்காள் அன்றியாவரோ⋆
நாட்டில் பிறந்து⋆ படாதன பட்டு மனிசர்க்கா⋆
நாட்டை நலியும் அரக்கரை⋆ நாடித் தடிந்திட்டு⋆
நாட்டை அளித்துய்யச் செய்து⋆ நடந்தமை கேட்டுமே (2)

கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால்⋆ மற்றும் கேட்பரோ⋆
கேட்பார் செவி சுடு⋆ கீழ்மை வசவுகளே வையும்⋆
சேட்பால் பழம் பகைவன்⋆ சிசுபாலன்⋆ திருவடி
தாட்பால் அடைந்த⋆ தன்மை அறிவாரை அறிந்துமே (3)

தன்மை அறிபவர் தாம்⋆ அவற்காள் அன்றியாவரோ⋆
பன்மைப் படர் பொருள்⋆ ஆதும் இல்பாழ் நெடுங்காலத்து⋆
நன்மைப் புனல் பண்ணி⋆ நான்முகனைப் பண்ணி⋆ தன்னுள்ளே
தொன்மை மயக்கிய தோற்றிய⋆ சூழல்கள் சிந்தித்தே (4)

சூழல்கள் சிந்திக்கில்⋆ மாயன் கழல் அன்றிச் சூழ்வரோ⋆
ஆழப் பெரும் புனல் தன்னுள்⋆ அழுந்திய ஞாலத்தை⋆
தாழப் படாமல்⋆ தன் பால் ஒரு கோட்டிடைத் தான் கொண்ட⋆
கேழல் திருவுருவாயிற்றுக்⋆ கேட்டும் உணர்ந்துமே (5)

கேட்டும் உணர்ந்தவர்⋆ கேசவற்காள் அன்றியாவரோ⋆
வாட்டம் இலா வண்கை⋆ மாவலி வாதிக்க வாதிப்புண்டு⋆
ஈட்டங்கொள் தேவர்கள்⋆ சென்றிரந்தார்க்கிடர் நீக்கிய⋆
கோட்டங்கை வாமனன் ஆய்ச்⋆ செய்த கூத்துக்கள் கண்டுமே (6)

www.prapatti.com

கண்டும் தெளிந்தும் கற்றார்⋆ கண்ணற்காள் அன்றியாவரோ⋆
வண்டுண் மலர்த்தொங்கல்⋆ மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்⋆
இண்டைச் சடைமுடி⋆ ஈசன் உடன் கொண்டு உசாச் செல்ல⋆
கொண்டங்குத் தன்னொடும் கொண்டு⋆ உடன் சென்ற-
துணர்ந்துமே (7)

செல்ல உணர்ந்தவர்⋆ செல்வன் தன் சீர் அன்றிக் கற்பரோ⋆
எல்லையிலாத பெரும் தவத்தால்⋆ பல செய்ம்மிறை⋆
அல்லல் அமரரைச் செய்யும்⋆ இரணியன் ஆகத்தை⋆
மல்லல் அரியுருவாய்ச்⋆ செய்த மாயம் அறிந்துமே (8)

மாயம் அறிபவர்⋆ மாயவற்காள் அன்றியாவரோ⋆
தாயம் செறும் ஒரு நூற்றுவர் மங்க⋆ ஓர் ஐவர்க்காய்⋆
தேசம் அறிய ஓர் சாரதியாய்ச் சென்று⋆ சேனையை
நாசம் செய்திட்டு⋆ நடந்த நல் வார்த்தை அறிந்துமே (9)

வார்த்தை அறிபவர்⋆ மாயவற்காள் அன்றியாவரோ⋆
போர்த்த பிறப்பொடு நோயோடு மூப்பொடு⋆ இறப்பிவை
பேர்த்து⋆ பெரும் துன்பம் வேரற நீக்கித்⋆ தன் தாளின் கீழ்ச்
சேர்த்து⋆ அவன் செய்யும்⋆ சேமத்தை எண்ணித் தெளிவுற்றே (10)

‡தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு⋆ இன்பக் கதி செய்யும்⋆
தெளிவுற்ற கண்ணனை⋆ தென் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
தெளிவுற்ற ஆயிரத்துள்⋆ இவை பத்தும் வல்லார் அவர்⋆
தெளிவுற்ற சிந்தையர்⋆ பா மரு மூவுலகத்துள்ளே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com